12 மே 2024
பாஸ்கா காலம் 7 ஆம் ஞாயிறு
(உலக சமூகத் தொடர்பு ஞாயிறு)

NEW WAY OF BEING CHURCH

newbec

## மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஆன்மீக ஒன்றிப்பில் பங்குகொள்ளும் உணர்வோடு தூதுரைத்தல், கொண்டாடுதல் மற்றும் செவிமடுத்தல் (மத்தேயு 5: 13-16)

மாதாந்திர கருப்பொருள்

திருஅவையாக குடும்ப வாழ்வை வலுப்படுத்துதல்

# அவர் தனது ஆவியை நம்மோடுப் பகிர்ந்துகொள்ள அனுமதிக்கிறார்

இயேசு தாம் பாடுபடுவதற்கு முந்தினநாள் இறுதி இராவுணவின்போது தமது சீடர்களோடு இருந்தார். அவரது மரணத்தைப் பற்றிய சோகத்தில் அவர் இருந்தபோதும், தனது இறுதி சொற்பொழிவை அவர்களுக்கு வழங்கினார். அவரைப் பற்றி எண்ணாமல் தாம் விட்டுப்பிரியப்போகும் சீடர்களைப் பற்றித்தான் அவர் நினைத்துக்கொண்டிருந்தார்.



இன்றைய முதல் வாசகத்தில் யூதாசுக்குப் பதிலாக மற்றொருவர் தேவை என்று பேதுரு சபையில் கூறுகிறார். இயேசு இருந்தபோது அவர்களோடு இருந்த ஒருவரை, அவர்களின் குழுவில் பங்காளராகவும் நம்பிக்கையைப் பாதுகாப்பவராகவும் இருக்கக்கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுக்க இறைவேண்டல் செய்தனர். அவர்களில் மத்தியாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இரண்டாம் வாசகத்தில் கடவுளின் நிபந்தனையற்ற அன்பைப் பற்றியும் அவரோடு நாம் கொண்டிருக்கக்கூடிய ஒன்றிப்பைப் பற்றியும் யோவான் தொடர்ந்து கூறுகிறார். கடவுள் நம்மை அன்பு செய்ததைப் போல நம்மால் அன்பு செய்ய இயலாது. ஆனால் நாம் ஒருவர் மற்றவரைஅன்பு செய்வதன்வழியாக இதற்குப் பதில் அளிக்கமுடியும். கடவுள் தம்முடைய ஒரே மகனை இந்த உலகிற்கு அனுப்பியதன் மூலம் தம்முடைய அன்பை வெளிப்படுத்தினார். கடவுள் அன்பாய் இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவர் கடவுளோடு இணைந்திருக்கிறார். கடவுளும் அவரோடு இணைந்திருக்கிறார் என்பதை யோவான் மீண்டும் வலியுறுத்துகிறார்.

இயேசு தம் சீடர்களை விட்டுச் செல்வதற்கு முன் அவர்களுக்கு சொல்லவேண்டியது இன்னும் அதிகம் இருந்தது. அவர்களின் நிலையைப் பற்றியும் அவர் அறிந்திருந்தார். நற்செய்தியில் இயேசு தம் சீடர்களுக்காக இறைவேண்டல் செய்வதை வாசிக்கிறோம். அவர்கள் கொண்டிருந்த அச்சத்தைப் பற்றியும் அவர் தந்தையிடம் ஒப்புக்கொடுக்கிறார். அவர் தம் தந்தையோடு ஒன்றித்திருப்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறார். அவர் தந்தையோடு ஒன்றித்திருப்பதுபோல அவர்களும் ஒன்றித்திருப்பார்களாக என்று இறைவேண்டல் செய்கிறார். அவர்களைத் தீயோனிடமிருந்து காத்தருளுமாறு தந்தையிடம் மன்றாடுகிறார். கடவுள் அவர்களைப் பாதுகாப்பார் என்பதை அவர்கள் அறியவேண்டுமென்று விரும்புகிறார். எவ்வாறு இயேசு அவரின் ஊழியத்தின்போது அவமதிக்கபட்டாரோ அதை சீடர்களும் தங்கள் நம்பிக்கைக்காக வெறுக்கப்படுவார்கள், ஆனால் அவர்கள் உலகில் தனியாக இல்லை; இயேசு எவ்வாறு அர்ப்பணிக்கப்பட்டாரோ, அதைப்போல அவர்களும் உண்மையில் அர்ப்பணிக்கப்படுவார்கள் என்று கூறுகிறார்.

இயேசுவின் இறைவேண்டல் இன்றைய காலத்திற்கும் பொருத்தமானது. நாம் இயேசுவைப் பின்பற்றி, அவர்மீது நாம் வைத்திருக்கும் நம்பிக்கைக்குச் சாட்சிகளாக இருக்கும்போது, நமக்கு பகைவர்கள் இருப்பார்கள். நாம் ஒன்றித்திருக்கவும், கடவுளின் அன்பிலும், நாம் ஒருவர் மற்றவருக்குக் காட்டும் அன்பிலும் பாதுகாக்கப்படவேண்டுமென்றும் மன்றாடுவோம்.

**குடும்பமே சமூக வாழ்வின் முதல் மற்றும் அடிப்படைப் பள்ளி.**

திருத்தந்தை 2 ஆம் ஜோன் போல்







**இன்றைய இறைவார்த்தை:**

திப: 1: 15-17, 20-26

திருபா: 103: 1-2, 11-12, 19-20

1 யோவான் 4: 11-16

யோவான் 17: 11-19

INTERNAL CIRCULATION ONLY
BUL 19/2024

**Published by:** Archdiocesan Pastoral Institute (API) | **Email:** api@archkl.org